# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஆறாம் பத்து

## பத்தாம் திருமொழி - கிடந்த நம்பி
## திருநறையூர் 7

** கிடந்த நம்பி குடந்தை மேவிக் * கேழலாய் உலகை
இடந்த நம்பி * எங்கள் நம்பி * எறிஞர் அரண் அழிய **
கடந்த நம்பி கடியார் இலங்கை * உலகை ஈரடியால் *
நடந்த நம்பி நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 1

விடம் தான் உடைய அரவம் வெருவச் * செருவில் முன நாள் * முன்
தடந்தாமரை நீர்ப் பொய்கை புக்கு * மிக்க தாடாளன் **
இடந்தான் வையம் கேழல் ஆகி * உலகை ஈரடியால் *
நடந்தானுடைய நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 2

பூணாது அனலும் * தறு கண் வேழம் மறுக * வளை மருப்பைப்
பேணான் வாங்கி * அமுதம் கொண்ட பெருமான் திருமார்வன் **
பாணா வண்டு முரலும் கூந்தல் * ஆய்ச்சி தயிர் வெண்ணெய் *
நாணாது உண்டான் நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 3

கல்லார் மதிள் சூழ் * கச்சி நகருள் நச்சி * பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க * இருந்த அம்மான் ** இலங்கைக் கோன்
வல்லாள் ஆகம் * வில்லால் முனிந்த எந்தை * விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் * நமோ நாராயணமே 4

குடையா வரையால் * நிரை முன் காத்த பெருமான் * மருவாத
விடை தான் ஏழும் வென்றான் * கோவல் நின்றான் ** தென்னிலங்கை
அடையா அரக்கர் வீயப் * பொருது மேவி வெங்கூற்றம் *
நடையா உண்ணக் கண்டான் நாமம் * நமோ நாராயணமே 5

கான எண்கும் குரங்கும் * முசுவும் படையா * அடல் அரக்கர்
மானம் அழித்து நின்ற * வென்றி அம்மான் ** எனக்கு என்றும்
தேனும் பாலும் அமுதுமாய * திருமால் திருநாமம் *
நானும் சொன்னேன் நமரும் உரைமின் * நமோ நாராயணமே 6

நின்ற வரையும் கிடந்த கடலும் * திசையும் இருநிலனும் *
ஒன்றும் ஒழியா வண்ணம் * எண்ணி நின்ற அம்மானார் **
குன்று குடையா எடுத்த * அடிகளுடைய திருநாமம் *
நன்று காண்மின் தொண்டீர்! சொன்னேன் * நமோ நாராயணமே 7

கடுங்கால் மாரி கல்லே பொழிய * அல்லே எமக்கு என்று
படுங்கால் * நீயே சரண் என்று * ஆயர் அஞ்ச அஞ்சா முன் **
நெடுங்கால் குன்றம் குடை ஒன்று ஏந்தி * நிரையைச் சிரமத்தால் *
நடுங்கா வண்ணம் காத்தான் நாமம் * நமோ நாராயணமே 8

பொங்கு புணரிக் கடல் சூழ் ஆடை * நில மாமகள் மலர் மா
மங்கை * பிரமன் சிவன் இந்திரன் * வானவர் நாயகராய **
எங்கள் அடிகள் இமையோர் * தலைவருடைய திருநாமம் *
நங்கள் வினைகள் தவிர உரைமின் * நமோ நாராயணமே 9

** வாவித் தடம் சூழ் மணி முத்தாற்று * நறையூர் நெடுமாலை *
நாவில் பரவி நெஞ்சில் கொண்டு * நம்பி நாமத்தை **
காவித் தடங்கண் மடவார் கேள்வன் * கலியன் ஒலி மாலை *
மேவிச் சொல்ல வல்லார் பாவம் * நில்லா வீயுமே 10

**அடிவரவு:** கிடந்த விடம் பூணாது கல் குடை கானம் நின்ற கடுங்கால் பொங்கு வாவி கறவா

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---